
திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# பால ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஜூலை 2020

ஸப்தகிரி இலவச இணைப்பு



வ்யாஸாய விஷ்ணுரூபாய
வ்யாஸரூபாய விஷ்ணவே



திருமலையப்ப ஸ்வாமி திருப்படி உற்சவத்தில் சிறார் பஜனைக்குழு

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# பால ஸப்தகிரி



ஸப்தகிரி இலவச இணைப்பு

ஜீலை 2020

மலர்–01 இதழ்–05

உள்ளுறை பக்கம்

இந்துக்கடவுள்கள் : சங்கடம் தீர்க்கும் சக்கரத்தாழ்வார் 04
- திரு. டி.டி. வரதராஜன், சென்னை.

பன்னிரு ஆழ்வார்கள் : திருமழிசையாழ்வார் 06
- திரு. ஜெ. சுவாமிநாதன், சென்னை.

கன்னட ஹரிதாஸர்கள் : குரு ராகவேந்திரர் 08
- திரு. கே. ராமநாதன், சேலம்.

சித்திரக்கதை : வேங்கடவருக்கே மாமனார் 10
கதை மூலம் :திரு. டி.ஸ்ரீநிவாசதீக்ஷிதுலு.
தமிழாக்கம் :திரு. வ.ஓ. சுரேஷ்.
சித்திரம் :திரு. பி.சிவபிரசாத்.

நீதிக்கதைகள் : கடவுளை நம்பினோர் கைவிடப்படார்! 14
- திரு. சத்யதாரா, சென்னை.

சிறந்த சிறுமி : செல்வி. அ.அனகா 16

புதிர் : வினா–விடை 17
- திருமதி ரங்கநாயகி, பெங்களூரு.

சித்திரம் வரைதல் 18

முன்னட்டை : ஸ்ரீவியாச மகரிஷி

பின்னட்டை : திருவேங்கடவன் (மூலவர்)

உலகங்களைக் காத்து உயிரினங்களுக்கு அருள் செய்வதில் ஸ்ரீமந்நாராயணனுக்கு ஐந்து ஆயுதங்கள் உதவி புரிகின்றன. அவை ஸ்ரீசுதர்சனமென்னும் சக்கரம், பாஞ்சஜன்யம் என்கிற சங்கம், கௌமோதகீ என்கிற கதை, நந்தகம் என்னும் வாள், சார்ங்கம் என்கிற வில் ஆக ஐந்து ஆகும். இவ்வைந்து ஆயுதங்களில் தலை சிறந்ததாகக் கருதப்படுபவர் ஸ்ரீசக்கரத்தாழ்வார். இவரது வைபவங்கள் பலவற்றுள், சிலவற்றை ஈண்டு காண்போம்.

ஸ்ரீமந்நாராயணனே பரத்வமான தெய்வம் என்பதை உணர்ந்து, அவனைப் பற்றும் பக்தியிலேயே ஆழங்கால் பட்டிருந்த பரமன் அடியார்களையே, "ஆழ்வார்கள்" என்று வைணவ உலகம் போற்றி வணங்கும். அத்தகைய ஆழ்வார்களுக்கு நிகராக வைத்து, ஸ்ரீசுதர்சனரும் போற்றப்பட்டு, "ஸ்ரீசுதர்சன ஆழ்வார், ஸ்ரீசக்கரத்தாழ்வார்" என்றெல்லாம் அழைக்கப்படக் காரணம் எம்பெருமானோடு நெருங்கிய சம்மந்தம் இருப்பதனாலேயாகும்.

ஒரு நாட்டையாளும் அரசர், நாடு நலம் காக்கப் பல அமைச்சர்களைத் தம்மகத்தே கொண்டு விளங்கிடினும், அதி முக்கியமான பெரும் பணிகளை அந்தரங்க



# சங்கடம் தீர்க்கும் சக்கரத்தாழ்வார்

மான ஒரு அமைச்சரிடம் ஒப்படைப்பது போல, பகவான் ஸ்ரீமந்நாராயணனும், தம்மடியார்களின் விரோதிகளை அறவே போக்கிடும் பெரும் பணியையும், கூடவே அடியார்களின் பிணித் துன்பத்தையும், அவர்கள் படும் அநாவசிய பயத்தையும் போக்கியருளும் பணியையும் ஸ்ரீசக்கரத்தாழ்வாரிடம் ஒப்படைத்துள்ளார்.

மேலும், ஒரு நாட்டின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் அமைச்சகத்துக்குத் தேவையான தனிப்பட்ட அதிகாரத்தையும் வழங்குவதோடல்லாமல், தேவையான ஆயுதங்களையும் அரசர் அளிப்பது போல, பகவான் ஸ்ரீசுதர்சனருக்கு பதினாறு ஆயுதங்களைத் தாங்கும் வரத்தினை அளித்துள்ளான்.

எம்பெருமானுக்கு எண்ணற்ற குணங்களிருப்பினும், அவை ஆறு குணங்களில் அடங்கும். அவை ஞானம், பலம், ஐச்வர்யம், வீர்யம், சக்தி, தேஜஸ் முதலியன. இவ்வாறு ஆறு குணங்களும் அமையப் பெற்றவரான ஷட்கோண (அறுகோண) வடிவில் அமைந்துள்ள ஸ்ரீசக்கரத்தாழ்வாரை வழிபடுவதன் மூலம் ஆனந்த வாழ்வு பெறலாம்.

“வீடே கதி” என்ற ஒரு சூழ்நிலை ஏற்படுங்காலத்தில் கோயிலுக்குச் சென்று பெருமாளைச் சேவிக்க முடியாத நிலையில், ஸ்ரீசுதர்சனரைப் போற்றித் தொழும் “ஸ்ரீ ஸுதர்சனாஷ்டகம்”, திருவாய் மொழி (7-4-1) “ஆழியெழ” எனத் துவங்கும் பத்துப் பாசுரங்களை நெஞ்சுருகிப் பாடி தினமும் வேண்டினால், பெருமாளைச் சேவிக்கும் பாக்கியத்தை அவர் ஏற்படுத்திக் கொடுப்பார் என்பது திண்ணம்.

– திரு. டி.டி. வரதராஜன், சென்னை.

திருமழிசையில் தை மாதம், கிருஷ்ணபக்ஷ பிரதமையில் மக நட்சத்திரத்தில் திருமழிசையாழ்வார் சுதர்சன (சக்கரம்)த்தின் அம்சமாய் அவதரித்தார். இவர் பக்திசாரர் என்றும் அழைக்கப்பட்டார்.

ஆழ்வார் சிலகாலம் திருவெஃகாவில் எழுந்தருளியிருந்தார். ஆழ்வாரின் சீடரான கணிகண்ணன் அவருக்குப் பலவித தொண்டு புரிந்து வந்தார். வயது முதிர்ந்த கிழவி ஒருத்தி திருமழிசையில் ஆழ்வார் வசிக்கும் இடத்தில் திருவிலக்கிடுதல், மெழுகுதல், கோலமிடுதல் போன்ற கைங்கர்யங்களை செய்துக் கொண்டிருந்தாள். ஒருநாள் ஆழ்வாரை சரணடைந்து ஆழ்வார் அருளால் தேவலோக பெண்போலே மாறாத இளமையை அடைந்தாள். அந்நகரத்து அரசனான பல்லவராயன் அவளுடைய வடிவழகைக் கண்டு அவளை மணம் புரிந்தான்.



நாளாக நாளாக தன் இளமை குறைவதையும், ராணியின் இளமை மாறாமல் இருப்பதையும் கண்ட அரசன் அதற்கான காரணத்தை வினவினான். அதற்கு ராணி, ஆழ்வாருடைய அருளேயாகும் என்றாள். மன்னன் ஆழ்வாரின் அருளைப் பெற வினவ, ராணியும், ஆழ்வாருடைய சீடரை அணுகவும்

# திருமழிசையாழ்வார்

– திரு. ஜெ.சுவாமிநாதன்,
சென்னை.

என்றாள். மன்னன் மறுநாள் சீடரை அழைத்து வர கட்டளையிட்டான். சீடரிடம் "எனக்கு மாறாத இளமை வேண்டும். அதற்காக உமது ஆழ்வாரை அழைத்து வாரும்" எனக் கட்டளையிட்டான். அதற்கு சீடன், உம்மைப் போல் இம்மைப் பயனை வேண்டுபவரை கண்ணெடுத்தும் பார்க்க மாட்டார்" என்றார். "எனக்கு இளமை வரவழைக்க நீர் பாடும்" என்றான் அரசன். கணிகண்ணன், "நான் பகவானைத் தவிர மானிடரை பாடமாட்டேன்" எனக் கூறினார். மன்னனும் கணிகண்ணனை ராஜ்யத்தை விட்டு வெளியே போ எனக் கட்டளையிட்டான். கணிகண்ணன் ஆழ்வாரிடம் வந்து மன்னன் கட்டளையைக் கூறி "அடியேனுக்கு விடைகொடுங்கள்" என்றார்.



ஆழ்வாரும் இத்தல பெருமாளிடம் கணிகண்ணனுடன் சேர்ந்து நானும் இந்நகரத்தை விட்டு போகிறேன் நீயும் உன் பாம்பு படுக்கையை சுறிட்டிக் கொண்டு எங்களுடன் புறப்படு என்று பாடினார். பெருமாளும் அவ்வாறே செய்தார். இதனால் கச்சிநகர் வாட்டமுற்று பல உத்பாதங்கள் நிகழ்ந்தன.

இதுகண்டு கலங்கிய மன்னன் ஆழ்வார் இருக்குமிடம் தேடி ஆழ்வாரின் காலிலே விழுந்து, கச்சிக்குத் திரும்பியருள வேண்டினான். ஆழ்வாரும் பெருமாளிடம் கணிகண்ணனுடன் சேர்ந்து கச்சி நகருக்கு திரும்புகிறேன். நீயும் திரும்பி வந்து முன் போலவே அக்கோயிலில் எழுந்தருள்க என்று பாடினார். இப்படி ஆழ்வார் கூறியபடி செய்ததால் அப்பெருமானுக்கு "சொன்னவண்ணம் செய்த பெருமாள்" எனத் திருநாமம் வழங்கலாயிற்று.

தமிழ்நாட்டின் கோயில் நகரமான கும்பகோணத்தில் கிருஷ்ண தேவராயரின் ஆட்சிக் காலத்தில் அவரிடம் முத்துமாலையை பரிசாகப் பெற்ற கிருஷ்ணபட்டர் இருந்தார். கிருஷ்ண பட்டரின் வம்ச வழியில் வந்த திம்மண்ண பட்டருக்கும் கோகிலாம்பாவுக்கும் நன்மகனாக சிதம்பரம், புவனகிரியில் ஸ்ரீராகவேந்திரர் பிறந்தார்.

திருப்பதி வேங்கடவனின் அருளால் பிறந்த தம் குழந்தைக்கு பெற்றோர் வேங்கடநாதர் என்று பெயரிட்டனர். சிறுவயதிலே தந்தையை இழந்தாலும் அறிவில் சிறந்து விளங்கிய வேங்கடநாதர் பலப்பல இலக்கியங்கள் கற்றார். பின்னர் ஸ்ரீசுதீந்திர தீர்த்தரிடம் வேதங்களையும் துவைத சித்தாந்தங்களையும் ஆழ்ந்து கற்று தம் வாதத் திறமையால் கல்வியாளர்களை வென்றார்.

வேங்கடநாதரின் கடவுள் ஈடுபாட்டையும், தரும சிந்தனையையும் கண்டு மகிழ்ந்த ஸ்ரீசுதிந்திர தீர்த்தர் அவரை மடத்தின் தலைமைப் பொறுப்பில் அமர்த்த விரும்பி, துறவு ஏற்கும் படி தன் விருப்பத்தை அவரிடம் தெரிவித்தார். ஆனால் வேங்கட நாதரோ இளம் வயதிலேயே சரஸ்வதி என்ற பெண்ணை மணந்திருந்தார். மேலும், லக்ஷ்மி நாராயணன் என்ற குழந்தையும் அவருக்கு இருந்தது. அதனால் துறவை ஏற்கத் தயங்கினார். இந்நிலையில் ஒரு நாள் அவர் கனவில் சரஸ்வதி தேவி தோன்றி துறவை ஏற்கவும் என்று கூறி



## குருராகவேந்திரர்

மறைந்தார். இதனால் தேவியின் ஆணைப்படியும், ஆன்மீக குருவின் விருப்பப்படியும் துறவு மேற்கொள்ள முடிவு செய்தார். அதன்படி வேங்கடநாதர் தன் மனைவி மற்றும் மகனை தன் அண்ணனிடம் ஒப்படைத்தார். பின்னர், தஞ்சையில் ஆன்மீக குரு ஸ்ரீசுதீந்திர தீர்த்தரின் ஆசியுடன் துறவை மேற்கொண்டார். அப்போது ஸ்ரீசுதீந்திரர் அவருக்கு ஸ்ரீராகவேந்திர தீர்த்தர் என்று பெயர் சூட்டினார்.

திருப்பதி வேங்கடவனின் அருள் பெற்ற மகான் ஸ்ரீராக வேந்திரர் ஆற்றிய அற்புதங்களும் பல. ஒரு முறை ஒரு கிரா மத்தில் மாம்பழக் கூழில் தவறி விழுந்து இறந்த சிறு குழந் தையை தம் கமண்டல நீர் தெளித்து உயிர்ப்பித்தார்.

அதோனி என்னும் குறுநில மன்னன் அவரை அவ மதிக்கும் எண்ணத்துடன் ஒரு தட்டில் மாமிசத்தை வைத்து அதை பட்டுத் துணியால் மூடி பரிசாகத் தந்தான். ஆனால் ஸ்ரீராகவேந்திரர் தம் ஆற்றலால் அதை இனிய கனிகளாக மாற்றினார்.

மற்றொரு முறையாக நெருப்பில் தவறி விழுந்த விலையுயர்ந்த ரத்தினத்தை எவ்வித சேதமும் இல்லாமல் மீண்டும் கிடைக்கச் செய்தார்.

அவரது ஆற்றல் கண்டு மன்னர்கள் பலர் அவருக்குப் பல பட்டங்கள், பரிசுகள் தந்து பெருமைப்படுத்தினர். அற் புதங்கள் ஆற்றிய மகான் ஸ்ரீராகவேந்திரர் மந்திராலயம் என்ற புனித இடத்தில் பிருந்தாவனத்தில் ஜீவசமாதி அடைந்தார். இன்றும் அவர் அங்கே வீற்றிருந்து தன்னை நாடி வரும் பக்தர்களுக்கு காமதேனுவாக, கற்பக மரமாக, சிந்தாமணியாக அருள் புரிந்து வருகிறார்.


**தெலுங்கு மூலம் : திரு.எஸ்.நாகராஜாசார்யுலு.**
**தமிழாக்கம் : திரு. கே. ராமநாதன்.**

சித்திரக்கதை


# வேங்கடவருக்கே மாமனார்


கதை மூலம் : திரு. டி.ஸ்ரீநிவாசதீக்ஷிதுலு
தமிழாக்கம் : திரு. வ.ஒ. சுரேஷ்
சித்திரம் : திரு. பி.சிவபிரசாத்


வேங்கடாசலத்தில் ஸ்வாமி புஷ்ப கைங்கர்யத்திற்காக அனந்தாழ்வான் நந்தவனத்தை அமைத்தார். நந்தவனத்தில் பூக்கும் பூக்களை அழகான மாலையாகத் தொடுத்து ஸ்வாமிக்கு சமர்ப்பிப்பது அவருடைய திருப்பணியாகும். ஒருநாள்...





மறுநாள் இரவு திருடர்களை பிடிக்க தோட்டத்தில் மறைந்திருந்தார் அனந்தன். அப்பொழுது ஆதி தம்பதிகள் ஆனந்தமாக தோட்டத்திற்குள் நுழைந்தனர்




அவர்களிருவரும் ஆனந்தமாக தோட்டத்தில் பூக்களை பறித்து, வாசனை நுகர்ந்து சுற்றி வந்தனர்





இந்த தெய்வீக ஜோடியை கண்டவுடன் அனந்தாழ்வானுக்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று
இவர்களுக்கு தகுந்த புத்திமதி கூற வேண்டும்
நீங்கள் யார்? தோட்டத்தை ஏன் பாழ்படுத்துகிறீர்?
அப்படியே ஸ்வாமி!
லக்ஷ்மி! தோட்டக்காரர் நம்மை பிடிக்க வந்து விட்டார். வா விரைவாகச் செல்வோம்
வேகமாகச் சென்ற அவ்விருவரையும் பின்தொடர்ந்தார் ஆழ்வான். ஸ்வாமி தப்பி சென்று விட, லக்ஷ்மி தேவி மட்டும் அவரிடம் அகப்பட்டுக் கொண்டார்
என்னை தங்களின் மகளாக பாவித்து, விட்டு விடுங்கள். இனிமேல் இங்கு வரமாட்டேன்
பேசாதே! இந்த சம்பங்கி மரத்தில் உன்னை கட்டி விடு கிறேன். உன் கணவன் வந்து உன்னை விடுவிப்பான்!



என் ஸ்வாமிக்கு மாலையாக தொடுக்க வேண்டியதை நீ சூடிக் கொண்டாயே? உனக்கு வெட்கமே இல்லையா...
தந்தையே! இனி இவ்வாறு செய்ய மாட்டேன். விட்டு விடுங்கள்
சம்பங்கி மரத்தில் மஹாலக்ஷ்மியை கட்டி வைத்து விட்டு, அவருக்கு எதிரில் காவலாக அனந்தாழ்வான் அமர்ந்திருந்தார்.
இவர் என்னை விடமாட்டார் போன்றுள்ளதே!
சுப்ரபாத சேவைக்காக ஆலயத்திற்குள் வந்த அர்ச்சகர்கள் ஸ்வாமி திருமார்பில் தாயார் இல்லாததைக் கண்டனர்.
அனந்தாழ்வான் தோட்டத்தில் சம்பங்கி மரத்தில் தாயார் கட்டுண்டு உள்ளார். நீங்கள் மேள தாளத்துடன் சென்று அழைத்து வாருங்கள் என ஸ்வாமி உத்தரவிட்டார்.
அர்ச்சகர்களும் சென்று அனந்தாழ்வானுக்கு நடந்ததை கூறினர். அப்பொழுது அனந்தாழ்வான்...
மகாப்பாவம் செய்தேன். தாயே! என்னை மன்னித்து, அருள் புரியுங்கள்!
பெரிய பூக்கூடையில் மணப்பெண் போன்று அலங்கரிக்கப்பட்ட மஹாலக்ஷ்மித் தாயாரை அமர வைத்து, தலை மீது சுமந்து ஆலயத்திற்குள் அனந்தாழ்வான் சென்றார்
ஸ்வாமி! என்னை கருணித்து தாயாரை ஏற்றுக் கொள்ளுங்கள்




அடுத்த இதழில்... திருவேங்கடமுடையானின் மற்றொரு திருலீலையை காண்போம்!

முற்றும்.





# கடவுளை நம்பினோர் கைவிடப்படார்!



முன்பொரு காலத்தில் விக்ரம சிங்கன் என்ற மன்னனுக்கு ஆலோசனை வழங்க, சத்தியவிரதன் என்ற அமைச்சர் இருந்தார். அமைச்சர் சத்திய விரதன் இறைவன் மீது அபாரமான பக்தியும் நம்பிக்கையும் கொண்டவராய் திகழ்ந்தார். “அவனன்றி ஓர் அணுவும் அசையாது” என்ற பழமொழிக்கு இணங்க, மனிதனின் ஒவ்வொரு செயலும் ஆக்கமும் இறைவனாலேயே நிகழ்த்தப்படுகின்றது என்ற கொள்கையில் திடமான நம்பிக்கை கொண்டு இருந்தார்.

ஒரு நாள் அரசன் மாம்பழத்தினை ஒரு கூர்மையான கத்தியால் நறுக்கும்போது, கத்தி அரசனின் சுண்டு விரலின் மீது அழுத்தப்பட்டு கையின் சுண்டு விரல் துண்டிக்கப்பட்டது. உடனே அரண்மனை வைத்தியர்கள் ஓடி வந்தனர். ஆனால் சுண்டு விரலினை மீண்டும் இணைக்க இயலவில்லை. அக்கை ஒரு விரலினை இழந்து ஊனமாகியது.

அமைச்சர் சத்தியவிரதனோ சிறிதும் பதறாமல் இதுவும் இறைவனின் செயலே. இறைவனின் செயல் எல்லாம் நன்மைக்கே என்கிறார். இதனை கேட்டு கடும் சினம் கொண்ட மன்னன் அமைச்சரை நோக்கி உமக்கென்ன பைத்தியம் பிடித்து விட்டதா?... என்று நிந்தனை செய்து அவரை உடனடியாக சிறையில் அடைத்து வதைக்கும்படி உத்தரவிட்டான். அமைச்சர் இதுவும் இறைவனின் விருப்பமே என்று சிறிதும் மன அமைதியை இழக்காமல் இருந்தார்.

நாட்கள் கடந்தன. ஒரு நாள் மன்னன் வேட்டையாட காட்டிற்குச் சென்றான். காட்டின் நடுவே வாழ்ந்த ஆதிவாசி

கள் மன்னனை கட்டி இழுத்து தங்களது தலைவனிடம் கொண்டு சென்றனர். தேவதைக்கு பலியாக்க கயிற்றினால் பிணைக்கப்பட்டு பலியாக நிறுத்தப்பட்டான் மன்னன். ஆதி வாசிகளின் தலைமை பூசாரி மன்னனை கூர்ந்து கவனித்து, மன்னனின் சுண்டு விரல் இல்லாததைக் கண்டு பலியை நிறுத்தி அரசனை திரும்ப அனுப்பி விட்டார். பூஜை பலியின்றி தடைபடுவதும் வனதேவதையின் விருப்பம் போலும் என்றார் பூசாரி. இதைத்தானே எனது அமைச்சர் சத்திய விரதன் கூறினான் என்று மனம் கலங்கினான் அரசன். உடனே அரண் மனைக்குத் திரும்பினான்.

உடனடியாக சிறையில் இருந்து அமைச்சர் சத்திய விர தனை விடுதலை செய்தான். "அமைச்சரே எனது தவற்றினை உணர்ந்து விட்டேன். நடக்கும் அனைத்து செயல்களும் இறைவனது விருப்பமே. நன்மை பயக்கும் இயக்கங்களே. அன்று நான் கத்தியினால் சுண்டுவிரலை வெட்டிக் கொள்ளா திருந்தால் இன்று ஆதிவாசிகள் என்னை வெட்டி வன தேவதைக்கு பலி கொடுத்திருப்பார்கள். உங்கள் சொற்களே சிறந்த தத்து வம் என்று பாராட்டினான்.



குழந்தைகளே! அகண்ட பிரபஞ்சத்தின் இயக்கங்களும், அணு வுக்குள் இருக்கும் அபார மான சக்தி வெளிப்படுவ தும் இறைவனின் இயக் கங்களே என்று உணர்ந்து... பக்தியுடன் வாழ்வோமாக...!

– திரு. சத்யதாரா,
சென்னை.



# சிறந்த சிறுமி

| | |
|---|---|
| பெயர் | - அ. அனகா |
| வகுப்பு | - 9ஆம் வகுப்பு |
| பிறந்த தேதி | - 11.05.2007 |
| தந்தை பெயர் | - திரு. வி. அருண்குமார் |
| தாய் பெயர் | - திருமதி வி. சுதா |
| பள்ளி | - மஹிலாலயம் பள்ளி, அலுவா, கேரளா |

## சிறுமியின் கலைத் திறமைகள் :

- கர்நாடக சங்கீதம், தெய்வீக பக்திப் பாடல்கள் பாடுதல் (குறிப்பு : 3 வயதிலியே சங்கீதம் பயின்றார்)
- இசைக்கருவி : வயலின் வாசித்தல்
- நாட்டியம் : மோஹினி ஆட்டம், குச்சுப்புடி, பரதநாட்டியம்

## சிறுமி பங்கு பெற்ற கலை நிகழ்ச்சிகள் :

- சென்றல் போர்ட் கல்வி நிறுவனத்தின் சார்பில் மாவட்ட அளவில் இளைஞர் கலைநிகழ்ச்சியில் பங்கு பெற்றது.
- 2017, காலடியில் நடைபெற்ற உலக நாட்டிய நிகழ்ச்சியில் அரங்கேற்றம்.
- 2018, சோட்டாநிக்கரை பகவதி அம்மன் ஆலயம், குருவாயூர் கிருஷ்ணர் கோயில், கொல்லூர் மூகாம்பிகை கோயில்களில் நடைபெற்ற நாட்டிய நிகழ்ச்சிகளில் பங்குகேற்றது.
- காலடி ஸ்ரீகிருஷ்ணர் கோயிலில் சாஸ்த்திரிய நடன நிகழ்ச்சியில் பங்கேற்றது.

## இலட்சியம்...

- நடனம் மற்றும் சங்கீதத்தில் புதிய சாதனை படைத்தல்.
- இந்திய கலாச்சார வளர்ச்சிக்கு சிறந்த முறையில் பாடுபடுதல்.

புதிர்

# "வினா–விடை"

1. சபரி பாட்டியின் குரு யார்?

அ) மதங்க மகரிஷி ஆ) வியாசர்

இ) அத்ரி ஈ) மரீசி

2. மகரிஷி சுக ப்ரம்மத்தின் தந்தை யார்?

அ) வசிஷ்டர் ஆ) மரீசி

இ) வியாசர் ஈ) அத்திரி

3. ஸ்ரீகண்ணன் ஸ்ரீபலராமரால் பிரதிஷ்டை பண்ணப்பட்ட ஸ்ரீசம்பத் குமார ஆலயம் உள்ள இடம்?

அ) மேல்கோட்டை ஆ) திருக்கடிகை

இ) திருவடமதுரை ஈ) திருப்பதி

4. ஸ்ரீஆளவந்தாரின் அவதார ஸ்தலம் எது?

அ) காட்டுமன்னார் கோயில் ஆ)திருக்குறுங்குடி

இ) மன்னார்குடி ஈ) ஸ்ரீரங்கம்

5. ஸ்ரீஇராமாநுஜ நூற்றந்தாதியை இயற்றியவர் யார்?

அ) வடுக நம்பி ஆ) கூரத்தாழ்வான்

இ) பராசரபட்டர் ஈ) திருவரங்கத்தமுதனார்

6) கல்கருடன் காட்சியளிக்கும் இடம் எது?

அ) நாச்சியார் கோயில் ஆ)திருப்பதி

இ) ஸ்ரீவில்லிபுத்தூர் ஈ)ஸ்ரீவைகுண்டம்

7) ஸ்ரீபகவத் கீதையில் எத்தனை அத்யாயங்கள் உள்ளன?

அ) 15 ஆ)16


இ) 17 ஈ) 18

திருமதி ரங்கநாயகி, பெங்களூரு.

1) அ, 2) இ, 3) அ, 4) அ, 5) ஈ, 6) அ, 7) ஈ

# சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...



மேலே உள்ள படத்தை கீழே உள்ள கட்டத்தில் வரையுங்கள்...





திருமலையப்ப ஸ்வாமி திருப்படி உற்சவத்தில் சிறார்

SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams
printing on 30-07-2020. Regd. with the Registrar of Newspapers under
"RNI" No.10742, Postal Regd.No.TRP/12 - 2018-2020
Licensed to post without prepayment No.PMGK/RNP/WPP-04/2018-2020



நித்யாய நிரவத்யாய ஸத்யாநந்த சிதாத்மநே |
ஸர்வாந்தராத்மநே ஸ்ரீமத்வேங்கடேசாய மங்களம் ||